www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

# People's Liberation Organization of Thamileelam

# மறைந்த தோழர் ஜனார்த்தனன்

எமது

# கண்ணீர் அஞ்சலி

---

"தாய்க்கொரு பழி நேர்ந்தால் மகற்க்கல்லவோ,
அன்னை தமிழிற்குப் பழி நேர்ந்தால் நமக்கல்லவோ"

என்றெண்ணி பதினாறு வயதிலேயே களம் காணப்புறப்பட்ட வீரமறவன் சி. ஜனார்த்தனன் (அலெக்ஸ்) 1984-1-18 அன்று மாலை 5-00 மணியளவில் விடுதலைக்காகப் போராடும் பல லட்சக்கணக்கான சக போராளிகளை, மக்களை துயரத்தில் மூழ்க விட்டுப் பிரிந்துவிட்டார் தமிழ் பேசும் மக்களின் முழுமையான விடுதலையே சமதர்ம தமிழீழத்தை உருவாக்கும் என சிந்தித்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் தன்னையும் ஒருவனாக இணைத்துக் கொண்ட இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றபோது தமிழீழ மக்கள் விடுதலைக் கழக மாணவர் அமைப்பின் முன்னணித் தோழராக திகழ்ந்தார். அதன் பின் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் படைத்துறையினுள் தன்னை ஒரு வீர மறவனாக இணைத் துக் கொள்ளத் தயாரானபோது 1984-1-15ல் ஏற்பட்ட திடீர்விபத்தொன்றில் சிக்கி விடுதலை நெஞ்சங்களை வெந்தணலில் கொதிக்க விட்டுப் பிரிந்து விட்டார்.

"சுந்தரத்தின் பாதைதனில் தொடர்ந்து செல்ல வந்தவன்
அந்தரத்தில் எம்மைவிட்டு எங்கேயோ சென்று விட்டான்
உன்தரத்தை நாமறிவோம் உறங்கமாட்டோம் எம்தோழா
உன்பணியை நாம் தொடர்வோம் இதுஉறுதி எம்தோழா"

மாணவர் அமைப்பு
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

1984-1-19

படிப்பகம்